DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.358-2016** |
| Deposition of witness for | - P.W. 3 |
| Name | - Suresh |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.10.2021

**முதல் விசாரணை:**

நான் தற்போது கேரளா மாநிலத்தில் குண்டுமலை சூரியநெல்லி எஸ்டேட்டில் வேலை செய்கிறேன். நான் ஓட்டுனராக பணிபுரிகிறேன். அ.சா.1யிடம் ஓட்டுனராக பணிபுரிகிறேன். 03.11.2015ல் சிவகாசி திருத்தங்கல் அருகில் உள்ள மருத்துவமனையில் ஸ்டீபன் மனைவிக்கு கர்ப்பப்பை ஆப்பரேசன் செய்வதற்காக அழைத்து வந்தேன். நான் பின்பு 04.11.2015ல் ஆப்பரேசன் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். ஆப்பரேசன் முடிந்த பிறகு அங்கு இருக்க சொன்னார்கள். 11.11.2015 அன்று ஸ்டீபனுடைய மனைவியை டிஸ்சார்ச் செய்து KL 33A 2430 Mahindra Lohan Red colour Car ல் ஸ்டீபனையும் அவரது மனைவியையும் அழைத்து வந்தேன். மதியம் 12.30 மணியளவில் பேரையூர் மொக்கு ரோட்டில் ஆந்திரா டீக்கடையிலி டீ குடிப்பதற்காக வண்டியை நிறுத்தியிருந்தேன். காரில் ஏசி யை போட்டிருந்ததால் கார் என்ஜினை நிறுத்தவில்லை. நானும் ஸ்டீபனும் இறங்கி டீ குடிக்க போனோம். அவரின் மனைவிக்கு டீயை கொடுத்துவிட்டு

நாங்கள் டீ குடிக்க போனோம். அப்போது அடையாளம் 'தெரியாத நபர் ஒருவர் காரை எடுத்துக்கொண்டு போனார். ஸ்டீபனின் மனைவி காருக்குள் இருந்தார். நாங்கள் உடனே அருகில் இருந்த காவல் நிலையத்திற்கு என்னை ஒருவர் அழைத்து சென்றார். காரை எடுத்துச்சென்றவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியாது. 7 வருடங்கள் ஆகிவிட்டது (நீதிமன்றத்தில் இருக்கிறாரா என பார்க்கச் சொன்ன போது தனக்கு தெரியவில்லை என்று சாட்சி சொல்லியுள்ளார்) 12ம் தேதி 1எதிரியை பிடித்ததாக செய்தித்தாளில் பார்த்தேன். பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்:

நான் வந்த கார் வாடகை கார் என்றால் சரியல்ல அந்த கார் கிறிஸ்து ராஜ் என்பவருக்கு சொந்தமானது. கிறிஸ்து ராஜ் பழக்கத்தின் அடிப்படையில் அந்த காரை வாடகைக்கு ஸ்டீபன் எடுத்தார். நான் வண்டி சம்பந்தமான இன்சூரன்ஸ், ஆர்சி புத்தகம், டிரைவிங் லைசன்ஸ், மாநிலம் விட்டு மாநிலம் செல்வதற்கான அனுமதி சீட்டு ஆகியவைகளை போலிசாரிடம் காண்பித்தேன். நான் ஸ்டீபனையும் அவரது மனைவியையும் மருத்துவ மனையில் இறக்கி விட்டு மீண்டும் 11ம் தேதி தான் வந்தேன். நான் சொல்லியவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அ.சா.1 சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 உடன் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு அ.சா.1 உடன் என்னிடமும் கையெழுத்து வாங்கினார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.